# தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு – மதிப்பீட்டாய்வு
## (Worship of Goddess in Tamil Literature : A Review)

கு. அந்தோணியம்மாள் | *K.Anthoniyammal*[1]

**Abstract:** The research paper evaluates the research work entitled tamiḻ ilakkiyattil tāytteyva vaḻipāṭu which is written by P.L.Samy. The book shows that the Goddess worship in Tamil land is widely performance by the ancient Tamil culture of indigenous people of this land.

பண்டைக் காலத்தில் தமிழக மக்களிடையே இருந்து வந்த தாய்த்தெய்வ வழிபாட்டைப் பற்றித் தமிழிலக்கியத்தில் வரும் செய்திகள் மிகவும் ஆர்வமூட்டும் செய்திகளாகும். மிகப் பழங்காலத்தில் தாய்த் தெய்வ வழிபாடு உலகில் உள்ள பல நாடுகளிலும் பல இனக்குழு மக்களிடையிலும் பரவலாக இருந்து வந்த வழிபாடாகும். இந்த வழிபாட்டின் தோற்றம் வரலாறு ஆகியவற்றை நன்கு அறிந்து கொண்டாலொழிய தற்கால மதங்களில் உள்ள தெய்வ வழிபாடுகளின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நன்கு உணர இயலாது. தெய்வ வழிபாடு தற்போது தமிழகத்தில் பல்வேறு பரிணாமங்களில் வந்துள்ளது.

தமிழகத்தில் தாய்த்தெய்வ வழிபாட்டு வளர்ச்சி வரலாற்றில் சிலப்பதிகாரத்தில் தலைவியான கண்ணகி தாய்த் தெய்வமாக மாறியது முக்கியச் செய்தியாகும். பின்னர் கேரள மாநிலத்தில் பகவதி அம்மனாகவும் வழிபடத் தொடங்கினார்கள். தாய்த் தெய்வ வழிபாட்டில் மகனாக சாத்தன் வழிபாடும் தமிழகத்தில் வந்துள்ளது. இம்மூன்று வழிபாட்டை மையப்படுத்தியது "தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு" எனும் நூலாகும். இந்நூலின் ஆசிரியர் பி.எல். சாமி வழிபாட்டுமுறை எவ்வாறு வந்தது அதற்கான இலக்கிய ஆதாரங்கள் என்னென்ன என்பதைக் கூறியுள்ளார். அந்த நூலைப் பற்றிய மதிப்பீடாக இக்கட்டுரை அமைகிறது.

**குறிச்சொற்கள்** : தமிழ், இலக்கியம், தாய்த்தெய்வம், வழிபாடு, மதிப்பீட்டாய்வு, கன்னித் தெய்வம்
***Citation:*** அந்தோணியம்மாள் கு., *(February 2021), "*தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு – மதிப்பீட்டாய்வு *(Worship of Goddess in Tamil Literature : A Review)", IIETS (Inam: International E-Journal of Tamil Studies) (ISSN:2455-0531), Vol.6, Issue 25, pp.1-3.*

***

### தாய்த் தெய்வ வழிபாடு

தாய்த் தெய்வத்தைத் தாயாகவும் கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்திலிருந்தே மரபாக உள்ளது. அவளை எல்லோரும் பெற்ற தாயாகக் கருதுவதும் அழியாக் கன்னியாகக் கருதுவதும் உண்டு. "மோடு என்றால் வயிறு என்று பொருள். மோடு என்பதற்கு எல்லோரையும் பெற்ற வயிறு என்று பொருளாகும்" என்பர். இதனைப் பற்றிய செய்திகளைப் பெரும்பாணாற்றுப்படைவழி உரையாசிரியர் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார்.

கன்னித் தெய்வம் என்ற கருத்தும் பழங்காலத்து நிகழ்வு என்றே கருதப்படுகிறது. ஆண் துணையின்றி கன்னியாகவே எல்லோரையும் தானே பெற்றதால் (Virgin Mother Goddess) என்று கருதப்படுவாள். இவ்வாறு புதுக்கருத்தாக பி.எல். சாமி குறிப்பிடுவது புலனாகிறது.

### அகநானூற்றில் தாய்த் தெய்வம்

கன்னியாகுமரித் தெய்வத்தைப் பற்றி கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தோன்றி இருக்க வேண்டும் என்று தைத்திரிய ஆரண்யகத்தில் குறிப்பு உள்ளது என்கிறார் பி.எல். சாமி. பாவ துன்பத்தைப் போக்க நீர்த்துறையில் நீராடி வழிபட்டனர். அதனைப் போலவே மகளிரும் தாங்கள்

[1] தமிழ் - முனைவர்பட்ட ஆய்வாளர், பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

செய்த பாவங்களைப் போக்க நோன்பிருந்து நீராடியதையும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அகநானூறு,

*"கடல்கெழு செல்வி கரை நின்றாங்கு*
*நீயே கானல் ஒழிய யானே*
*வெறிகொள் பாவையிற் பொலந்தவென் அணிதுறந்து*
*ஆடுமகள் போலப் பெயர்தல்*
*ஆற்றேன் தெய்ய அலர்க விவ்வூரே"* (அகம்.370)

என்று குறிப்பிடுகிறது. இதனில் நீர்த்துறைத் தெய்வத்தைக் 'கடல்கெழு செல்வி' என்று குறிப்பிடுவர். தற்போது குமரி மாவட்டத்தில் கடல்கெழு செல்வி என்று பெண் தெய்வத்தை வணங்குகின்ற முறை காணப்படுகிறது.

தலைவியின் நோய் தணிய நிலையான துறையில் இருந்த கடவுளுக்கு வெள்ளாட்டுக் கிடாய் பலியிட்டும் தணியவில்லை. இதனை அகநானூறு

*"கள்ளும் கண்ணியும் கையுறையாக*
*நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்*
*நிலைத்துறைக் கடவுட் குளப்பட வோச்சி"* (அகம்.156)

என்று கூறுவதன்வழி கடல், நீர்த்துறைத் தெய்வங்களுக்கு பலியிடுதல் மரபு உள்ளது என்பது புலப்படும்.

தாய்த் தெய்வங்கள் காட்டில் இருப்பவை என்ற செய்தி முக்கியமான ஒன்றாக உள்ளது. 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்ற தொல்காப்பியர் கூற்றும் இதனை உறுதிப்படுத்தும். இதனால் மாயோனுக்கு முன்னரே காடுறை கடவுளாகத் தாய்த் தெய்வம் இருந்திருக்கின்றாள் என்பதை

*"………… ஓங்கு புகழ்*
*கானமர் புரவி அருளலின் வெண்காற்*
*பல்படைப் புரவி எய்திய தொல்லிசை*
*துணங்கு நுண் பனுவற் புலவன் பாடிய*
*இனமழை தவழும் ஏழிற் குன்றத்துக்*
*கருங்கால் வேங்கை செம்பூம் பிணையால்"* (அகம்.345)

என்ற அடிகள் புலப்படுத்தும். இவற்றில் கானம் என்று கூறப்படும் காட்டிற்குத் தாய் தெய்வம் அருளியது வெள்ளைக் குதிரைகள். அதனை நன்னன் என்ற மன்னன் பெற்றான் என்ற செய்தி வழி தாய்த் தெய்வம் உறையுமிடம் காடு என்பது புலனாகிறது.

**ஆற்றுப்படையில் தாய்த் தெய்வம்**

காட்டில் வாழும் தாய்த் தெய்வத்தைப் பற்றிப் பொருநராற்றுப் படையில்,

*"வலை வலந்தன்ன மென்னிழன் மருங்கிற்*
*காடுறை கடவுட்கடன் கழிப்பாய பின்றைப்"*(பொருந. 41-42)

எனும் அடிகள் குறிப்பிடுகின்றன. இதனில் காட்டில் தான் தாய்த் தெய்வமான பெண் தெய்வம் "காடுறை கடவுள்" என்று கூறுகிறது. தற்பொழுது வழக்கத்தில் துர்க்கை என்ற பெயரில் கூறப்படுகிறது. இத்தாய்;த் தெய்வமே பெருங்காட்டுக் கொற்றி என்று கலித் தொகையும். வனதுர்க்கை என்றும், வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ" என்றும், "இழை அணி சிறப்பிற் பிழையோன் குழவி" என்று சங்க இலக்கியத்திலும் காணப்படுகின்றன. இவை அனைத்தும் தாய்த் தெய்வத்திற்கு உரியது என்பது புலனாகும்.

தாய்த் தெய்வம் சிலம்பி வந்த நூல் போன்ற துகிலை உடுத்தியிருந்ததாகக் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். இதனை,

*"பாம்புறை மருதினோங்குகிளை நீழற்*
*பலிபெறு வியன்கள மலிய வெற்றிக்*
*கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடுந்*
*துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோற்*
*சிலம்பி வானூல் வலந்த மருங்கிற்"* (பெரும்பாண். 232-236)

என்று குறிப்பிடுகின்றது. பாம்பு உறையும் இடத்தில் இருந்ததாகக் கூறியதையும் திருமுருகாற்றுப்படையில் 2 கையுடன் இருந்ததாகவும் கூறியுள்ளதையும் கவனிக்க இடமுண்டு. 'துணங்கையஞ் செல்வி' என்று கூறும் தாய்த் தெய்வமே துணங்கையம் பூதம் என்று அழைக்கப்பட்டுள்ளது.

**பதிற்றுப்பத்தில் தாய்த் தெய்வம்**

பழந்தமிழர் தொழுத கொற்றவை அயிரைமலையில் இருந்ததாகப் பதிற்றுப்பத்து கூறியுள்ளளது. இக்கொற்றவை சேரர்க்குரிய குலதெய்வமாகப் போற்றப்பட்டு வந்துள்ளது. இதனை

*"நிறம்படு குருதி புறம்பழ னல்லது*
*மடையெதிர் கொள்ள வஞ்சுவரு மரபிற்*
*கடவு ளயிரை நிலைஇ"* (பதிற். 79.16-18)

என்ற அடிகளின் வழி அயிரைமலையில் இருந்த கொற்றவைக்கு வீரர்களுடைய உயிர்நிலையில் இருந்து இரத்தம் பலியாக அளிக்கப்பட்ட செய்தி புலனாகும். தெய்வத்திற்குப் பலியிடுதல் சேரர் செய்துள்ளனர் என்ற குறிப்பு உள்ளது.

**மணிமேகலையில் தாய்த் தெய்வம்**

தேவி கோயில்களைத் திருமுற்றம் என்றழைப்பது வழக்கமாயிற்று. துர்க்கையும் பிடாரியும் வேறுவேறு தாய்த் தெய்வங்களாகத் தொழப்பட்டன. காடமர் செல்விக்குச் சக்கரவாளக் கோட்டத்தில் இருந்த கோயில் மணிமேகலையில்

*"நாற்பெரு வாயினும் பாற்பட் டோங்கிய*
*காப்புடை யிஞ்சிக் கமுது வழங்காரிடை*
*யுலையா உள்ளமோ குயிர்க் கடனிறுத்தோர்*
*தலைதூங்கு நெடுமரந் தாழ்ந்து புறஞ்சுற்றிய*
*மீகை யோங்கிய பெரும்பலி முன்றிற்*
*காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்"* (மணி : 6.48-53)

என்ற அடிகள் மூலம் நரபலி இடும் பீடிகையும் கடனாக அறுத்த தலைகள் தொங்கும் நெடுமரமும் வர்ணிக்கப் பட்டுள்ளன. இதனால் இலக்கியங்கள், காப்பியங்கள், ஆற்றுப்படைகள் வழி, தாய்த்தெய்வம், கடல் தெய்வம், காடுறை தெய்வம், போர் வெற்றி தெய்வம், பலிகொடுக்கும் தெய்வம் என்ற நிலைகளிலும் பின்னர் இவ்வழிபாடு பகவதி வழிபாடு, மகன் சாத்தன் வழிபாடு என்ற நிலையில் காணப்படுகின்றன. இதனை பி.எல். சாமி தனது தமிழ் இலக்கியங்களில் தாய்த் தெய்வ வழிபாடு என்ற நூல்வழி வெளிப்படுத்தியுள்ளார்.

**எதிர்கால ஆய்வுக்கு வழிவகுக்கும் தலைப்புகள்**

பத்துப்பாட்டில் தாய்த் தெய்வ வழிபாடு
எட்டுத் தொகையில் தாய்த் தெய்வ வழிபாடு.
சங்க இலக்கியத்தில் பெண் தெய்வ வழிபாட்டு முறைகள்
சிலப்பதிகாரத்தில் பெண் தெய்வ வழிபாடு
மணிமேகலையில் பெண் தெய்வ வழிபாடு

போன்ற பொருண்மையில் ஆய்வு நிகழ்த்த இடமுண்டு.

**முடிவுரை**

பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் தாய்த் தெய்வத்தை வழிபடக் காரணமாக அமைந்தது சமுதாயம் செழிப்புடன் இருக்க வேண்டும் எனும் வளர்சார் நோக்கமாகும். இதனை இந்நூலாசிரியர் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார். அதற்கு தமிழ் இலக்கியங்களான அகநானூறு, ஆற்றுப்படை, காப்பியங்களின் சான்றுகள் துணை நிற்கின்றன.

**பார்வைநூல்**

சாமி, பி.எல்., 2011 (ஐ.ப), தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.